# வலயக் கல்வி அலுவலகம் – துனுக்காய்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2020 தரம் 10

தமிழ் மொழியும் இலக்கியமும்
Tamil Language & Lit.

22 T

இரண்டு மணித்தியாலம்
Two Hours

### தமிழ் மொழியும் இலக்கியமும் III

**கவனிக்க:**
* அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.
* **1, 2, 3, 4** ஆகிய வினாக்களுக்கும் **5, 6, 7** ஆகிய வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ் வினாத்தாளுக்குரிய புள்ளிகள் **80** ஆகும்.

**1. சுருக்கமான விடை எழுதுக.**

**1.** பின்வரும் தொடரைச் **சந்திபிரித்து** எழுதுக.
புலனழிந்தொரு புத்துயிரெய்துவேன்

**2.** "உப்பில்லாக் கஞ்சியினை யுண்ணு மறுசுவை போல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல்..."
(அ) இங்கு **அறுசுவை** உணவாகக் கருதப்படுவது எது?
(ஆ) **'தப்பிய கந்தை'** என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

**3.** "விலகு பிள்ளை... அது கிடக்க எடுத்துக்கொண்டு வா, தந்தி தபாற் கட்டுக்களை"
(அ) மேற்படி கூற்று யாரால் கூறப்பட்டதாகும்?
(ஆ) **'பிள்ளை'** என்று இங்கு குறிப்பிடப்படுபவர் யார்?

**4.** "...கணக்காய ரில்லாதவூரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை யில்லா வவைக்களனும்...."
(அ) **'கணக்காயர்'** என்று குறிப்பிடப்படுபவர் யார்?
(ஆ) **'பிணக்கறுத்தல்'** என்பதால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

**5.** "கோத்த சிந்தனையோ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பல கழித்திட்டனன்"
(அ) **'கோத்த சிந்தனை'** என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?
(ஆ) பல நாட்களை வீணே செலவுசெய்தவர் யார்?

**6.** "மாகம டங்கலும் மால்விடை யும்பொன்
னாகமும் நாகமும் நாண நடந்தார்"
(அ) நாவலரது எழுச்சி ஒப்பிட்டுக்காட்டப்படும் **இதிகாசப் பாத்திரம்** எது?
(ஆ) பின்வருவனவற்றுக்குப் பொருளுரைக்குக. **1.** மடங்கல் **2.** பொன்னாகம்

**7.** "உப்பில்லாக் கஞ்சியினை..."
(அ) மேற்படி பாடல் இடம்பெறும் **நூல்** யாது?
(ஆ) இந் நூலின் **ஆசிரியர்** யார்?

**8.** "வேரெடுத்து சுதந்திர நற்பயிர்
வீந்திடச் செய்தல்..." — இப் பாடலில் இடம்பெற்றுள்ள **அணி**யை இனங்கண்டு விளக்குக.

**9.** **"நீதிப்பாடல்கள்"** என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

10.“கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்
கண்ணிலாதவர் போலத் திகைப்பர்” – இங்கு
(அ) கண்ணிலாதவர் எனக் குறிப்பிடப்படுவர் யார்?
(ஆ) **கதி** என்பதன் பொருள் யாது?

**(20 புள்ளிகள்)**

**2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் – யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.
(அ) இச் செய்யுளில் கூறப்படும் பிரதான கருத்து யாது?
(ஆ) அது எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?

2. புலங்க ளோடு கரணமும் ஆவியும்
போந்து நின்ற விருப்புடன் மானிடன்
நலங்க ளேது விரும்புவன் அங்கவை
நண்ணு றப்பெறல் திண்ணம தாமென,
இலங்கு நூலுணர் ஞானியர் கூறுவர்
யானும் மற்றது மெய்யெனத் தேர்ந்துள்ளேன்
விலங்கி யற்கை யிலையெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே.
(அ) மானிடர் விரும்பியவற்றை அடையும் வழிவகை எவையென ஞானியர் குறிப்பிடுகின்றனர்?
(ஆ) **‘விலங்கியற்றை’** என்ற தொடரின் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது?

3. தண்டா மரையி னுடன் பிறந்தும் தண்டேன்
நுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்து
கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலும் அறியார்
புல்லர் நல்லோரைக்
கண்டே களித்தங் குறவாடித் தம்மிற்
கலப்பர் கற்றோரே.
(அ) அறிவுடையோர், அறிவற்றோரின் இயல்புகளை எடுத்துக்காட்டுக.
(ஆ) கையாளப்பட்டுள்ள உவமைச் சிறப்பைத் துலக்குக.

4. காத்தி ருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார் ந்து களித்திட
யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தனையோ டேகி யதில்மகிழ்
கொண்டு நாட்கள் பலகழித் திட்டனன்
பூத்த ஜோதி வதனம் திரும்புமேல்
புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்.
(அ) தான் அனுபவித்தவையாக பாரதி குறிப்பிடுவனவற்றை எடுத்துக்காட்டுக.
(ஆ) பெண்ணின் மீது பாரதி கொண்ட அளவற்ற காதல் வெளிப்படுமாற்றை விளக்குக.

5. வாதத்துக்கென்று வந்தவர்களில் இருந்தவர்கள் இருந்தே விட்டார்கள். எழுந்தவர்கள் வேறு வியாசம் பண்ணிக்கொண்டு வெளியே போய்விட்டார்கள். போனவர்கள் பின் உள்ளே வரவில்லை. தப்பித்துக்கொள்ள வழிவகையின்றி தம்மை அறியாமலே வாய்குழறி அகப்பட்டுக்கொண்டவர்கள் தமது உடல் நடுங்க நாத் தழுதழுத்து ‘பிறிற்றோ தக்கவர் அல்லர்’ என்று தாமே சொல்லிச் சமாதானப்பட்டுக்கொண்டார்கள். அன்று நடந்த கூட்ட நிகழ்ச்சியோடு பிரிட்டோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றுவிட்டது.

(அ) கூட்ட மண்டபத்தில் உண்டான மாற்றத்தை கட்டுரையாசிரியர் எவ்விதம் எள்ளி நகையாடுகின்றார்?

(ஆ) பிரிட்டோவின் பிரதிநிதித்துவக் கதை நின்றமைக்கான காரணம் யாது?

**(20 புள்ளிகள்)**

3. **பாரதியார் – சுயசரிதை** பாடப் பகுதியில் பாரதியின்,

(அ) காதலுணர்வு

(ஆ) இலக்கிய ஆளுமை என்பன வெளிப்படுமாற்றை ஆராய்க.

***அல்லது***

**நாவலர் எழுந்தார்** எனும் கட்டுரையின்,

(அ) மொழிநடை

(ஆ) இதிகாசச் சித்திரிப்பு என்பன வலியுறுத்தப்படுமாற்றை தெளிவுறுத்துக. **(15 புள்ளிகள்)**

4. (அ) "தண்டா மரையினுடன்..." **(விவேகசிந்தாமணி)**

(ஆ) "தேம்படுபனையின் றிரள்..." **(வெற்றிவேற்கை)**

– ஆகிய பாடல்களில் **முறையே** மண்டுகம் - வண்டு என்பவற்றின் இயல்புகளும், பனை – ஆலமரம் என்பவற்றின் இயல்புகளும் எடுத்துரைக்கப்படுமாற்றை ஆராய்க.

***அல்லது***

**நீதிப்பாடல்களில்,**

(அ) "மூதுரை" கூறும் **அடக்கம்**

(ஆ) "நாலடியார்" கூறும் **நட்பு** என்பவற்றை விளக்குக. **(15 புள்ளிகள்)**

- **5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

5. **நாவலர் எழுந்தார்** என்ற கட்டுரை வாயிலாக நாவலரின் நேர்மையும், பிறிற்றோவின் நேர்மையீனமும் எடுத்துரைக்கப்படுமாற்றினை ஆராய்க. **(10 புள்ளிகள்)**

6. **பாரதியார் – சுயசரிதை** எனும் பாடப்பகுதியில்,

(அ) விரும்பியவற்றை அடையாதவர்களின் இயல்புகள்

(ஆ) உவமைச் சிறப்பு என்பவற்றை ஆராய்க. **(10 புள்ளிகள்)**

7. "அணிகளைக் கையாள்வதில் பண்டைக்காலப் புலவர்கள் வல்லவர்கள்" – நீர் படித்த எவையேனும் **இரண்டு** நீதிப்பாடல்களை அடியொற்றி இக்கூற்றைப் பரிசீலிக்குக. **(10 புள்ளிகள்)**

* * *